

திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக முதன்மைச் செயலாளரும், சட்டமன்றத் துணைத் தலைவருமான கே.என்.நேரு தனது தொகுதிக்கு உட்பட்ட 51, 52, 53, 54, 55 மற்றும் 56 ஆகிய வார்டுக்கு உட்பட்ட செடல் மாரியம்மன் கோவில், சூனி பஜார், மார்சிங் பேட்டை, அந்தோணியார் கோவில் தெரு, கான்வென்ட் ரோடு, மேலப்புதூர், தலைமை தபால் நிலையம், முத்தரையர் சிலை, ராஜா காலனி,பெரிய மிளகு பாறை, கருமண்டபம், ராம்ஜிநகர் உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்அருகில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், வழக்கறிஞர்கள் ஓம் பிரகாஷ் பாஸ்கர் கவியரசன் அந்தோணி மணிவண்ண பாரதி முத்துச்செல்வம், குடமுருட்டி சேகர் டோல்கேட் சுப்ரமணியன், கமல் முஸ்தபா மோகன்தாஸ், மார்சிங் பேட்டை செல்வம் ,கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, கவிதா, தனசேகர், கருப்பையா உள்ளிட்ட பலர் உடன்சென்றனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (16.05.2026 - சனிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் காட்டுமன்னார்கோவில் எம்.ஆர்.கே.கூட்டரங்கில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட கழக செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவுகள் குறித்து.
2. நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு குழு வருகை சம்பந்தமாக.
3. கழக ஆக்கப் பணிகள்.


**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.,

---

### நாளை (17ஆம் தேதி) காரைக்குடியில்

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, மே 16 -

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை ( 17ஆம் தேதி) காரைக்குடியில் நடைபெறுகிறது.

இது குறித்து சிவ கங்கை மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

சிவகங்கை மாவட்ட கழகச் செயற்குழு கூட்டம் நாளை ( 17 ஆம் தேதி-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டி ணன் அரங்கத்தில் நடைபெறுகிறது. மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது

1. 14ஆம் தேதி கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் குறித்து .

2.2026 ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து.

3. கழக வளர்ச்சிப் பணிகள்.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள்,

சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலைமாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

---

### அமெரிக்கா – ஈரான் போரை காரணம் காட்டி

# பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய பா.ஜ.க. அரசு உயர்த்தியது!

## மக்கள் அதிர்ச்சி — விலைவாசி உயரும் அபாயம்!

புதுடெல்லி, மே 16 .

நாடு முழுவதும் பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் 14 காசுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை உயர்வு மூலம், சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 103 ரூபாய் 98 காசுகளாக அதிகரித்துள்ளது. டீசல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் 11 காசுகள் உயர்ந்து, 95 ரூபாய் 47 காசுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்திருந்தபோது, பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய அரசு குறைக்கவில்லை.

எரிபொருள் விலை குறைவாக இருந்தபோது, அதன் பலனை ஒன்றிய அரசு மக்களுக்கு வழங்கவில்லை. அமெரிக்கா – ஈரான் போர் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது.

5 மாநில தேர்தல் காரணமாக பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தாமல் இருந்த ஒன்றிய அரசு, தற்போது தேர்தல் முடிந்த பிறகு, எரிபொருள் விலையை உயர்த்தி மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

எரிபொருள் விலை மலிவாக இருந்தபோது, அதன் லாபத்தை கொள்ளையடித்த ஒன்றிய அரசு, தற்போது விலை உயர்வை மட்டும் தங்களது தலையில் சுமத்துவதா? என்று வாகன ஓட்டிகளும், பொது மக்களும் கோபத்துடன் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

---

### வேலுமணி ஆதரவு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் பெற வாய்ப்பு!

# த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் விதிமீறல்!

## கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் குற்றச்சாட்டு!



சென்னை, மே 16 –

த.வெ.க அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில், சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் சட்டமன்ற விதிகளை மீறியுள்ளதாக மூத்த வழக்கறிஞர் வில்சன் குற்றம் சாட்டியுள்ளார். வேலுமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் செய்யப்பட வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான வில்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடைபெற்ற அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 144 வாக்குகள் பெற்றதாக கூறப்படுவது சட்டப்படி தவறான கூற்றாகும் என்றும் 118 என்பது மட்டுமே சரி என்றும் தெரிவித்துள்ளார்.

எஸ்.பி.வேலுமணி தலைமையிலான அதிருப்தி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் குழு, தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவாக வாக்களிக்க சட்டப்பேரவை தலைவர் அனுமதி வழங்கியது, தமிழ்நாடு சட்டமன்ற விதிகளை முற்றிலும் மீறும் செயலாகும் என்று வழக்கறிஞர் வில்சன் தெரிவித்துள்ளார். சட்டப்பேரவைத் தலைவர் சட்டமன்ற விதிகளை முறையாகப் பின்பற்றியிருக்க வேண்டும், அவசரமாக அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தியிருக்கக்கூடாது என்பதே சரியான நிலைப்பாடு என்றும் வில்சன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தலைவரின் இந்த முடிவும், அதிருப்தி உறுப்பினர்களின் வாக்குகளும் முறையான ஆதாரங்களுடன் ஆளுநரிடமோ அல்லது நீதிமன்றத்திலோ முன்வைக்கப்பட்டால், 26 அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் சட்டவிரோதமானவை என அறிவிக்கப்பட்டு, அவை செல்லாததாக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும், வில்சன் தெரிவித்துள்ளார்.

---

### த.வெ.க. அரசில் குதிரை பேரம் இல்லை என்பதை உறுதிப்படுத்துவீர்!

# முகமூடியோடு வந்த நபர் யார்? முதலமைச்சர் சொல்ல வேண்டும்!

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேட்டி!



சென்னை, மே 16 -

தமிழ்நாடு அரசில் குதிரைபேரம் நடைபெறவில்லை என்பதை உறுதிப்படுத்த, முகத்தை மூடிக்கொண்டு சந்திக்க வந்த நபர் யார் என்பதை முதலமைச்சர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., வலியுறுத்தியுள்ளார்.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்எல்ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், மறைமுக அரசியல் அல்ல, வெளிப்படையான ஆதரவே மக்களின் நம்பிக்கை என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசில் எந்தவித குதிரைப் பேர அரசியலும் இல்லை என்பதை முதலமைச்சர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர், மதச்சார்பற்ற வெற்றி கூட்டணியை சேர்ந்தவர்கள் எவ்வாறு நிபந்தனை இல்லாத ஆதரவு' என்று வெளிப்படையாக தெரிவித்தார்களோ, அதே போல் அ.தி.மு.க. வில் இருந்து பிரிந்து வந்தவர்களும் தங்களின் ஆதரவை எந்தவித நிபந்தனையும் இல்லாமல் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்றும், அப்போது தான் குதிரைப் பேரம் நடைபெறவில்லை என்பதை மக்கள் நம்புவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முதலமைச்சர் விஜயை சந்திக்க முகத்தை மூடிக்கொண்டு வந்த நபர் யார் என்பதை விஜய் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், அதற்கு பின்பு எந்தவிதமான குதிரை பேரமும் நடக்கவில்லை என்பதை, மக்களுக்கு முதலமைச்சர் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்றும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்எல்ஏ வலியுறுத்தியுள்ளார்.

---

# செஞ்சி நகர தி.மு.க. சார்பில் நீர்மோர் பந்தல்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, மே 16 -

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர திமுக சார்பில் செஞ்சி விழுப்புரம் சாலையில் உள்ள கூட் ரோட்டில் பொது மக்களின் தாகம் தீர்க்கும் வகையில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நீர் மோர்பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், வெள்ளரிக்காய், கூல் ட்ரிங்க்ஸ், இளநீர், முலாம்பழம், தர்பூசணி, ஆகியவற்றை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,

மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் சேகர் நிர்வாகிகள் அய்யாதுரை, அணையேரி ரவி, ஜே.எஸ். சர்தார், பாலகிருஷ்ணன், ராம்குமார், தொண்டரணி பாஷா, வனக்குழு ராமு, செந்தில், மாணவரணி வினோத், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# ஊட்டியில் 21வது ரோஜா கண்காட்சி!



உதகை,மே 16-

நிலகிரி மாவட்டம் ஊட்டியில் கோடை விழாவின் பகுதியாக 21வது ரோஜா கண்காட்சி தொடங்கியது. சமவெளி பகுதியில் கோடை வெயில் காரணமாக பிற மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. ஊட்டியில் தற்போது கோடை மழை பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள் ரசிக்கும் வகையில் காலநிலை நிலவுகிறது.

நீலகிரி மாவட்டம் நிர்வாகம் சார்பில் ஆண்டுதோறும் மே மாதம் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி மற்றும் படகுகள் போட்டி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. ஊட்டியில் உள்ள விஜயநகரம் பகுதியில் ரோஜா பூங்காவில் 21வது ரோஜா கண்காட்சி மே 14 தொடங்கி மே 18ஆம் தேதி வரை மொத்தம் 5 நாட்களுக்கு இக்கண்காட்சி நடைபெறுகிறது.

பூங்காவில் பாரம்பரிய ரோஜாக்களுக்கு தனியாக இடம் உள்ளது. பல்வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட பாரம்பரியமிக்க ரோஜா செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளதால், தற்போது மலர்கள் பூத்து உள்ளது. இந்த ஆண்டு ரோஜா பூங்காவில் பறவைகளை பாதுகாப்போம் என்று கருத்தை மையப்படுத்தி பல வண்ணங்களை கொண்ட ரோஜா மலர்களை கொண்டு அன்னப்பறவை, இருவாச்சி, கழுகு மற்றும் சிட்டுக்குருவி உள்ளிட்ட பறவைகளை வடிவமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்த்து வருகிறது.

சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து வருவதால் 5 நாட்கள் கண்காட்சி நடைபெற உள்ள நிலையில் மேலும் சில நாட்கள் கண்காட்சி நீட்டிக்கப்படும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே ரோஜா கண்காட்சிக்கு அடுத்தபடியாக ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடுகளை தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

---

# மணிப்பூரில் கிறிஸ்தவப் பாதிரியார்கள் 3 பேர் சுட்டுக்கொலை!

இம்பால், மே 16 -

மணிப்பூரில் கிறிஸ்தவ பாதிரியார்கள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

மணிப்பூரில் கடந்த 2023 ம் ஆண்டு மெய்தி, குக்கி சமூகத்தினரிடையே ஏற்பட்ட இன மோதல் தற்போது வரை நீடித்து வருகிறது. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை காங்போக்பி மாவட்டத்தில் ஆயுதமேந்திய கும்பல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கிறிஸ்தவ பாதிரியார்கள் மூன்று பேர் பலியாகினர். 4 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலைக் கண்டித்தும், வன்முறை சம்பவங்களை தடுக்க வலியுறுத்தியும் மணிப்பூரில் உள்ள 3 மாவட்டங்களில் ஒருநாள் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. குக்கி பழங்குடியினத்தின் குக்கி இன்பி என்ற அமைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

குக்கி மற்றும் நாகா பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் காங்போக்பி, சுராசந்த்பூர் மற்றும் சண்டேல் ஆகிய மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

இதன் காரணமாக கடைகள், சந்தைகள், வணிக நிறுவனங்கள் அடைக்கப்பட்டிருந்தன. பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்தின்றி சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

---

### மீண்டும் ஒரு நிர்பயா சம்பவம்:

# டெல்லியில் ஓடும் பேருந்தில் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை!

## பா.ஜ.க. ஆளும் டெல்லியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு!

புதுடெல்லி, மே 16 –

பா.ஜ.க. ஆளும் டெல்லியில் ஓடும் பேருந்தில் பெண் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லி பிதம்புரா குடிசைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், மங்கோல்புரியில் உள்ள ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறார். கடந்த 11ம் தேதி இரவு, அவர் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது, சரஸ்வதி விஹார் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நின்றுள்ளது.

அப்போது அந்த பெண்ணை வலுக்கட்டாயமாக பேருந்துக்குள் இழுத்து சென்று பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பெண் புகார் தெரிவித்தையடுத்து, குற்றம் சாட்டப்பட்ட ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஆகியோரை போலீசார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

பா.ஜ.க. ஆளும் டெல்லியில் நாளுக்கு நாள் குற்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.